**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– 2016–17 ஆம் நிதியாண்டிற்கு பார்வையற்றோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்கள் தேர்வு எழுத அமர்த்தப்படும் உதவியாளர்களுக்கு உதவித் தொகை (Scribe Assistance) வழங்கும் திட்டத்திற்கு திட்டத் தொடராணை மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1D) எண்.82 நாள்: 25–11– 2016

துன்முகி, கார்த்திகை 10,
திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.73, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள்22–06–2012.
2. அரசாணை(நிலை) எண்.21, மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.–3)த் துறை, நாள் 23–03–2015.
3. அரசாணை(2D) எண்.07, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 23–11–2015.
4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கடிதம் எண்.2971/சி.ப.தி/ 2016, நாள் 19.072016.

---

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, 2012–13–ம் நிதியாண்டிலிருந்து பார்வையற்ற மாணவ, மாணவிகள் தேர்வு எழுத அமர்த்திக் கொள்ளும் உதவியாளர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும் திட்டத்தில் ஒரு தேர்வு தாளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையினை ரூ.100/– லிருந்து ரூ.250/– ஆக உயர்த்தி அதற்கென ரூ.27,65,250/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, அரசு, அரசு அங்கீகாரம் பெற்ற சிறப்பு பள்ளிகளில் பயிலும் பார்வையற்ற மாணவ / மாணவியர்களுக்கு தேர்வு எழுத அமர்த்தப்படும் உதவியாளர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தில் ஒரு தேர்வு தாளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையினை ரூ.250/–லிருந்து ரூ.300/– ஆக உயர்த்தி வழங்கி அரசாணை வெளியிடப்படடது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, 2015–16 ஆம் நிதியாண்டில் அரசு அங்கீகாரம் பெற்ற சிறப்பு பள்ளிகளில் கல்வி பயிலும் பார்வையற்ற மாணவ / மாணவியர்களுக்கு தேர்வு எழுத அமர்த்தப்படும் உதவியாளர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை வழங்கும் திட்டத்திற்கு திட்டத் தொடராணையும், மேலும், இத்திட்டத்திற்கென தேவைப்படும் ரூ.43,00,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கியும், அரசாணை வெளியிடப்பட்டது.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கருத்துருவில், மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, 2015–16 ஆம் நிதியாண்டில் அரசு அங்கீகாரம் பெற்ற சிறப்பு பள்ளிகளில் கல்வி பயிலும் பார்வையற்ற மாணவ / மாணவியர்களுக்கு தேர்வு எழுத அமர்த்தப்படும் உதவியாளர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூ.43,00,000/– பகிர்ந்தளிக்கப்பட்டு முழுவதுமாக செலவினம் மேற்கொள்ளப்பட்டுவிட்டது என்றும், மேலும், இவ்வாணையரகத்தின் கீழ் இயங்கும் அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற சிறப்புப் பள்ளிகளில் பயிலும் பார்வையற்ற மாணவ / மாணவியர்களுக்கு தேர்வு எழுத அமர்த்தப்படும் உதவியாளர்களுக்கு உதவித் தொகையை வழங்கும் திட்டத்திற்கு, 2016–17 ஆம் நிதியாண்டிற்கு திட்டத் தொடராணையும், இத்திட்டத்திற்கென ரூ.40,07,700/– நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்து 2016–17 ஆம் நிதியாண்டில் அரசு அங்கீகாரம் பெற்ற சிறப்பு பள்ளிகளில் கல்வி பயிலும் பார்வையற்ற மாணவ / மாணவியர்களுக்கு தேர்வு எழுத அமர்த்தப்படும் உதவியாளர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை வழங்கும் திட்டத்திற்கு திட்டத் தொடராணையும், மேலும், இத்திட்டத்திற்கென தேவைப்படும் ரூ.40,07,700/– (ரூபாய் நாற்பத்து இலட்சத்து ஏழாயிரத்து எழுநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்:–

"2235– சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன்–101–மாற்றுத் திறனாளிகள் நலன்–I திட்டத்தில் சேராதது–CS–பார்வையற்றோர் பள்ளி மாணவர்களுக்கு எழுத்தர் உதவி அளித்தலும் உதவி ஆட்களுக்கான செலவுகளும்–33–தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல்–02–ஊதியம்".

(த.தொ.கு..2235–02–101–CS–3328)

7. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கு தேவைப்படும் கூடுதல் நிதியொதுக்கம் ரூ.7,23,700/– 2016–17–ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படுவதை எதிர்நோக்கி, இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகின்றது. இச்செலவினத்தை 2016–17–ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/ இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கான கருத்துருவை தவறாமல் நிதி(சந)த் துறைக்கு உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 59488/நிதி(சந)/2016, நாள் 23.11.2016 ல் கண்டுள்ள நிதித் துறையின் ஒத்திசைவுடன் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1252 (ஆயிரத்து இருநூற்று ஐம்பத்து இரண்டு)வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநில கணக்காயர் (இருப்பு), தலைமைச் செயலகம், சென்னை–9.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை– 18. (பெபரில்)

<u>நகல்:–</u>
நிதி (சந/வ.செ.பொ.II) த் துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர்(சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்களின் சிறப்பு நிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி .

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

28/11/16

பிரிவு அலுவலர்.